# ஆசிரியர் தேர்வு வாரியம் – இணையவழி விண்ணப்பம் - வட்டாரக்கல்வி அலுவலர்-2023

## விண்ணப்பதாரர்கள் இணையவழியில் விண்ணப்பிக்கும் முறை மற்றும் அது குறித்த அறிவுரைகள்

இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தங்களின் தற்போதைய பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணை உபயோகப்படுத்த வேண்டும். மின்அஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண் இல்லையெனில் புதிதாக ஒரு மின்னஞ்சல் முகவரியை உருவாக்கியும் அலைபேசி எண் பெற்றும் பயன்படுத்த வேண்டும். மேற்படி மின்னஞ்சல் மற்றும் அலைபேசி எண்ணுக்கு மட்டும் ஆசிரியர் தேர்வு வாரிய தகவல்கள் வெளியிடப்படுகின்ற காரணத்தினால், மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்ணை விண்ணப்பதாரர்கள் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

**முக்கிய குறிப்பு 1**: விண்ணப்பதாரர்கள் நட்சத்திரக் குறியீடு (*) உள்ள பகுதிகளை கட்டாயமாக பூர்த்தி செய்தல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு 2** : விண்ணப்பதாரர்கள் தமிழில் உள்ள அறிவுரைகளை பதிவிறக்கம் செய்ய கீழே கொடுக்கப்பட்டுள்ள Link -ஐ click செய்யவும்.

**புதிய விண்ணப்பதாரர்கள் / பயனாளிகள்**

i. 1. விண்ணப்பதாரர் வட்டாரக்கல்வி அலுவலர் பணியிடத்திற்க்கு தனது அடிப்படை சுயவிவரத்தினை New User Sign up Process ல் அளித்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரர் சரியான மின்னஞ்சல் முகவரி அளிக்கப்பட்டுள்ளதா என்பதை மீள ஒருமுறை சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3. விண்ணப்பதாரர் தமது கைபேசி எண்ணை OTP மூலம் சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.

ii. விண்ணப்பதாரர் அவசியமாக தேவைப்படும் விவரங்களை அளித்தவுடன் New User Sign up படிவத்தில் submit கொடுக்கவும்.

iii. விண்ணப்பம் சரியாக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் User ID மற்றும் Password உருவாக்கப்பட்டு விண்ணப்பதாரருக்கு திரையில் காட்டப்படும், User ID மற்றும் Password விண்ணப்பத்தாரரின் மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணுக்கு அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர் உள்நுழைவு பக்கத்தில் உள்ள பயனர் அடையாளம் மற்றும் கடவுச் சொல்லை உள்ளிட்டு உள்நுழைவு செயல்முறையை முடிக்க கட்டாயமாக உள்நுழைவு பொத்தானை கிளிக் செய்து உள்நுழைவு செயல்முறையை நிறைவு செய்ய வேண்டும்.முதல் சரியான உள்நுழைவுக்குப்பின் விண்ணப்பதாரர் கட்டாயமாக கடவுச் சொல்லை மாற்ற வேண்டும்

iv. கடவுச் சொல்லை மாற்றிய பின்னர் அறிவுரைப் பக்கம் தோன்றும். அறிவுரைகளைப் படித்த பின்னர் தேர்வர்கள் திரையில் காட்டப்பட்டுள்ள தேர்வுப் பெட்டியை தேர்ந்தெடுத்து **உறுதி மொழி** (Declaration)வழங்க வேண்டும். மேலும் தொடர விண்ணப்பதாரர் தொடரும் (Continue) பொத்தானை கிளிக் செய்ய வேண்டும்.

**விண்ணப்பப் படிவம் பின்வரும் பிரிவுகளைக் கொண்டது**.

1. சுய விவரங்கள்
2. கல்வித் தகுதிகள்
3. புகைப்படத்தை பதிவேற்றுதல்
4. கையொப்பத்தை பதிவேற்றுதல்
5. ஆவணங்களை பதிவேற்றுதல்
6. முன்னோட்டம்
7. கட்டணப் பிரிவு
8. விண்ணப்ப படிவங்களைப் பதிவிறக்கம் செய்தல்
9. தேர்வு
10. தேர்வு மைய விவரங்கள்
11. கோரிக்கைகள்
12. பொது
13. தேர்வை ரத்து செய்தல்

1. சுய விவரங்கள்

i. தனிப்பட்ட விவரங்களை பூர்த்தி செய்ய வேண்டிய பக்கத்தில் விண்ணப்பதாரர் தமது பிறந்த இடம் (Nativity) மற்றும் பாலினம் (Gender) விவரங்களை உள்ளிடவும். பாலினத்தை தேர்ந்தெடுத்தவுடன் உறுதிபடுத்தல் பெட்டி தோன்றும். விண்ணப்பதாரர் தமது பாலினத்தை உறுதி செய்ய, சரி (ok) என்பதை கிளிக் செய்யவும். விண்ணப்பதாரர் தங்கள் நிரந்தர முகவரி மற்றும் தொடர்பு முகவரி ஆகியவற்றை அதற்கான இடத்தில் பூர்த்தி செய்ய வேண்டும்.

ii. விண்ணப்பதாரர் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ் உள்ளதா? என்ற கேள்விக்கு "ஆம்" என்று பதில் அளித்து இருந்தால் சாதிகளின் பட்டியல் (List of communities ) தோன்றும். அங்கு விண்ணப்பதாரர் பொருத்தமான சாதியைத் (Community) தேர்ந்தெடுக்க வேண்டும்.

iii. விண்ணப்பதாரர் "தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை வைத்துள்ளீர்களா?" என்ற கேள்விக்கு "இல்லை" என கிளிக் செய்து இருந்தால் பொதுப்பிரிவு (OC) எனக் கருதப்படும்.

iv. விண்ணப்பதாரர் தமது மதம் மற்றும் சாதி சார்ந்த விவரங்களைப் பூர்த்தி செய்த பின்னர் சாதிச் சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

v. தனிப்பட்ட விவரப் பக்கத்தின் அனைத்து கட்டாயப் புலங்களும் உள்ளிடப்பட்டதும் கல்வித் தகுதியை பூர்த்திசெய்ய விண்ணப்பதாரர் Save மற்றும் Continue பொத்தானை கிளிக் செய்தல் வேண்டும்.

**2. கல்வித் தகுதிகள்**

i. இங்கே விண்ணப்பதாரர் தமது கல்வித் தகுதிகள் பற்றிய முழுவிவரங்களை கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் பூர்த்தி செய்ய வேண்டும்.

ii. Save & Continue பொத்தானை கிளிக் செய்தவுடன் புகைப்பட பதிவேற்றம் (Upload Photo ) மற்றும் கையொப்பப் பதிவேற்றம் (Upload Signature) என்ற பகுதி திரையில் தோன்றும்.

iii. கல்வித் தகுதி தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**3. புகைப்படத்தை பதிவேற்றம் செய்தல்**

i. இங்கே, விண்ணப்பதாரின் User ID, பெயர், பாலினம் மற்றும் பிறந்த தேதி திரையில் தானாகவே தோன்றும்.

ii. விண்ணப்பதாரர் சமீபத்தில் எடுக்கப்பட்ட (Scanned Image) தமது பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை பதிவேற்றம் செய்ய வேண்டும் (அனுமதிக்கப்பட்ட அளவு 20 kb to 60kb அனுமதிக்கப்பட்ட format JPG, JPEG, PNG)

iii. பின்னர், விண்ணப்பதாரர் Choose File பொத்தானை கிளிக் செய்து தமது புகைப்படத்தை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

iv. புகைப்படத்தை பதிவேற்றம் செய்த பின்னர் விண்ணப்பதாரர் CONTINUE பொத்தானை கிளிக் செய்ய வேண்டும். அதன் பிறகு கையொப்பம் (UPLOAD SIGNATURE) பகுதி தோன்றும்.

**4. கையொப்பத்தை பதிவேற்றம் செய்தல்**

i. இங்கே விண்ணப்பதாரரின் User ID, பெயர், பாலினம் மற்றும் பிறந்த தேதி திரையில் தானாகவே தோன்றும்.

ii. விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை பதிவேற்றம் செய்வதற்கு ஏற்றவாறு scan செய்து கொள்ள வேண்டும். (அனுமதிக்கப்பட்ட அளவு 10 kb to 30kb அனுமதிக்கப்பட்ட format JPG, JPEG, PNG)

iii. பின்னர், விண்ணப்பதாரர் CHOOSE FILE பொத்தானை தேர்வு செய்து ஸ்கேன் செய்யப்பட்ட கையொப்பத்தைப் (Scanned Signature) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

iv. கையொப்பத்தைப் பதிவேற்றம் செய்த பின்னர் விண்ணப்பத்தாரர் CONTINUE பொத்தானை கிளிக் செய்ய வேண்டும். அனைத்து செயல் முறைகளையும், முடித்த பின்னர் முன்னோட்டம் (Preview) என்ற பகுதி தோன்றும்.

**5. ஆவணங்களைப் பதிவேற்றம் செய்தல்**

i. விண்ணப்பதாரரின் சொந்த விவரங்கள், பிறந்ததேதி, சாதி, கல்வித் தகுதிகள் போன்றவை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் அதற்காக கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதன் பின்னர் எந்த விண்ணப்பதாரருக்கும் ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய வாய்ப்பு அளிக்கப்படமாட்டாது. மேலும், அவர்கள் தேர்வில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ii. அனைத்துத் தொடர்புடைய ஆவணங்களையும் பதிவேற்றம் செய்யும் போது அவை தெளிவாக இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். தெளிவில்லாத ஆவணங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது, மேலும் அவை நிராகரிக்கப்படும்.

iii. தொடர்புடைய ஆவணங்கள் தொடர்புடைய பக்கத்தில் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். தவறான இடத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டவை ஆவணங்களாகக் கருதப்படமாட்டாது.

iv. அனைத்து ஆவணங்களும் அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதிக்கு முன்னர் பெற்றிருக்க வேண்டும். சான்றிதழ்கள் வழங்குவதில் கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற அலுவலகங்களின் கால தாமதத்திற்கு ஆசிரியர் தேர்வு வாரியம் பொறுப்பு ஏற்காது.

v. இணையவழி விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ளவாறு அனைத்து ஆவணங்களும் பதிவேற்றம் செய்யப்படவில்லை என்றால் விண்ணப்படிவம் நிராகரிக்கப்படும்.

**6. முன்னோட்டம்**

i. இந்தப் பிரிவில், விண்ணப்பப் படிவத்தில் நிரப்பப்பட்டஅனைத்து விவரங்களும் அந்தந்தப் பிரிவுகளுக்கான (Edit – விருப்பத் தெரிவுடன்) காட்டப்படும். விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தை திருத்த விரும்பினால், விண்ணப்பத்தின் குறிப்பிட்ட பகுதிக்கு எதிரான Edit இணைப்பை கிளிக் செய்து விவரங்களை திருத்தம் செய்யலாம்.

ii. இப்பொழுது விண்ணப்பம் ஒரே பக்கத்தில் காட்டப்பட்டு கடைசியில் "Proceed to submit Form" என்ற பொத்தான் இருக்கும்.

iii. விண்ணப்ப படிவத்தை "Submit application Form" கிளிக் செய்வதன் மூலம் Declaration பெட்டி திறக்கும். தேர்வுப் பெட்டியை (Popup Box) இயக்கிய பிறகு விண்ணப்ப செயல்முறையை முடிக்க Submit பொத்தானை கிளிக் செய்யவும்.

iv. ஒருமுறை Submit பொத்தானை கிளிக் செய்த பின்னர் விண்ணப்பதாரர் தான் சமர்பித்த விண்ணபத்தில் எந்த மாற்றமும் செய்ய முடியாது.

v. இறுதியாக கட்டணம் செலுத்த வேண்டிய (Payment Section) பகுதியை காண்பிக்கும்.

**7. கட்டணப்பிரிவு**

i. தாங்கள் விண்ணப்பித்த தேர்விற்கான பக்கத்தில் கட்டணத் தொகை ரூ600/300 திரையில் தோன்றும். கட்டணம் செலுத்துவதற்கு செல்லும் பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் Payment Gateway பக்கத்திற்கு திருப்பி விடப்படும். திருப்பி விடப்பட்ட பக்கத்தில் விண்ணப்பதாரர் கட்டணம் செலுத்துவதைத் தொடங்க கீழ்க்குறிப்பிட்டுள்ள ஏதாவதொரு கட்டண முறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ii. கட்டணம் செலுத்தும் பக்கத்தில் கட்டணம் செலுத்துவதற்கான பின்வரும் வழிமுறைகள் காட்டப்பட்டிருக்கும்.

a) Net Banking

b) Credit card

c) Debit card

விண்ணப்பதாரர் இணையதளம் மூலம் மட்டுமே கட்டணத்தை செலுத்த வேண்டும்.

iii. கட்டணம் செலுத்தும் செயல்முறையைத் தொடங்கிய பின்னர் ஏதேனும் காரணத்தினால் பரிவர்த்தனை தோல்வியுற்றால் விண்ணப்பதாரர் மீண்டும் கட்டண பரிவர்த்தனையைத் தொடங்கலாம்.

iv. **திரும்பப் பெறுதல் மற்றும் இரத்து செய்தல் கொள்கை**

இணையதளத்தில் செலுத்திய கட்டணங்களை இரத்து செய்வதற்கான அல்லது திரும்பப் பெறுவதற்கான எந்த ஒரு கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட முறை கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே தொகையானது வங்கி மூலம் விண்ணப்பதாரருக்கு திருப்பி அளிக்கப்படும்.

**8. விண்ணப்பப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்தல்**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பதிவிறக்கம் செய்ய விண்ணப்பதாரரின் “Dash board”- ல் உள்ள விண்ணப்பப் படிவ இணைப்பை Click செய்ய வேண்டும். பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நகல் எதிகாலத்தில் தேவைப்படுகின்ற காரணத்தினால் அதனை விண்ணப்பதாரர்கள் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

**குறிப்பு** : ஆன்லைன் விண்ணப்பங்கள் மற்றும் தேர்வு தொடர்பான சந்தேகங்கள் சார்பான அனைத்துத் தொடர்புகளும் மின்அஞ்சல் (trbgrievances@tn.gov.in) மூலம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். பதிவு அஞ்சல் மூலமாகவோ, சாதாரண தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அளிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**9. தேர்வு:**

i. தேர்வர்கள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தேர்வு மையத்தில் தேர்வு எழுத தயாராக இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளி (PwD) விண்ணப்பதாரர்கள் மட்டுமே அவர்களின் இருப்பிடத்திற்கு அருகில் இருக்கும் தேர்வு மையங்களில் தேர்வு எழுதப் பரிசீலிக்கப்படுவார்கள். மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் தங்களது இருப்பிடம் தொடர்பான ஆவணங்களை அளித்தல் வேண்டும்.

ii. தேர்வுக்கு 7 நாட்களுக்கு முன்னர் ஒதுக்கீடு செய்யப்படும் மாவட்டம் இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வுக்கு 3 நாட்களுக்கு முன்னதாக தேர்வு மைய விவரங்கள் அடங்கிய Admit Card விண்ணப்பதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

**10. தேர்வு மைய விவரங்கள்:**

i. தேர்வு மைய விவரங்களுடன் கூடிய அனுமதி அட்டை விண்ணப்பதாரரின் மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்பப்படும்.

ii. தேர்வு மையம் மாற்றம் தொடர்பாகப் பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கபடமாட்டாது.

**11. முறையீடுகள்**

i. வட்டாரக்கல்வி அலுவலர் - தேர்விற்கு விண்ணப்பிப்பது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களை மின்னஞ்சல் வாயிலாக ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பி வைக்கலாம். வாட்சப் (WhatsApp), அஞ்சல், மற்றும் பிற தகவல் தொடர்புகள் ஆசிரியர் தேர்வு வரரியத்தால் அனுமதிக்கப்படமாட்டாது.

**12. பொதுக்குறிப்பு**

i. குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரர் தகுதியானவர் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிப்பது விண்ணப்பதாரரின் பொருப்பாகும். கல்வித் தகுதி, சாதிச்சான்றிதழ், பிறந்த தேதி, பிற சிறப்பு இட ஒதுக்கீடு கோரியதற்கான சான்றிதழ்கள் போன்றவற்றை வழங்குவதற்கான பொறுப்பு விண்ணப்பதாரரை மட்டுமே சார்ந்துள்ளது.

ii. இணையவழியில் விண்ணப்பிப்பதாலோ / தேர்வில் பங்கு கொள்வதாலோ விண்ணப்பதாரர் தெரிவு சார்ந்து உரிமை கோர இயலாது.

**13. தேர்வை ரத்து செய்தல்**

i. நிருவாக மற்றும பிற காரணங்களுக்காக எந்த நேரத்திலும் தேர்வை தள்ளிவைக்கவோ இரத்து செய்யவோ ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு உரிமையுண்டு.

ii. பணிநாடுநர்களின் ஒழுங்கின்மை : - தேர்வு மையங்களில் ஒழுங்கீன செயல்களில் ஈடுபடும் பணி நாடுநர்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுத்தும் விதமாக நடக்கும் பணிநாடுநர்கள் மீது கடுமையான குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு சார்ந்த பணிநாடுநர்கள் 5 முதல் 7 ஆண்டுகள் வரை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் அனைத்துத் தேர்வுகளிலும் கலந்துகொள்ள தடைவிதிக்கப்படும் என்பதோடு மட்டுமல்லாமல் ஆயுட்கால தடையும் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.